## இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பராமரிப்பும் அதன் நடைமுறையும் - கற்பிட்டி காழி நீதிமன்றத்தை மையப்படுத்திய ஆய்வு

**எஸ்.எம்.எம் மஸாஹிர் , எம்.என்.எப் சிமாரா**
இஸ்லாமிய கற்கைகள் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை
*mazahirsmm@seu.ac.lk, nfsimara@gmail.co*

**ஆய்வுச் சுருக்கம்***:* இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 47(1) ஆனது மனைவி மற்றும் பிள்ளை அல்லது அதன் சார்பில் கோரப்படும் பராமரிப்பினை பெற்றுக்கொடுக்கும் நியாயாதிக்கத்தினை காழி நீதிமன்றங்களுக்கு வழங்கியுள்ளது. இன்று இக்காழி நீதிமன்றங்களில் பராமரிப்பு தொடர்பில் நடைமுறை ரீதியான பல முறைகேடுகள் இடம்பெறுவதனால் நிவாரணம் கோருவோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்தவகையில் காழி நீதிமன்றங்களின் பராமரிப்பு நடைமுறைகள் குறித்த ஆய்வு அவசியமாகின்றது. கற்பிட்டி பிரதேசத்தில் இயங்கி வரும் காழி நீதிமன்றத்தின் பராமரிப்பு தொடர்பான சட்டத்தின் நடைமுறையை பரிசீலிப்பதனை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்புரீதியான ஆய்வு முறையிலான இக்கட்டுரை கற்பிட்டி காழி நீதிபதியிடம் பெறப்பட்ட நேர்காணல், 2013 - 2015 வரை பராமரிப்பு தொடர்பாக தீர்க்கப்பட்ட வழக்காய்வுகளின் பகுப்பாய்வு மற்றும் ஆவணங்களின் மீளாய்வு ஆகியவற்றை மையப்படுத்தியது. இவ்வாய்வினூடாக கற்பிட்டி காழி நீதிமன்றத்தின் பராமரிப்புச் சட்ட நடைமுறையில் காணப்படும் ஒருசில முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**: இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம், முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டம், பராமரிப்பு, கற்பிட்டி, காழி நீதிமன்றம்.

### அறிமுகம்

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் ஓர் ஆள்சார் சட்டமாகும். இச்சட்டத்தின் 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 47(1)ஆனது மனைவி மற்றும் பிள்ளை அல்லது அதன் சார்பில் கோரப்படும் பராமரிப்பினை பெற்றுக்கொடுக்கும் நியாயாதிக்கத்தினை காழி நீதிபதிக்கே வழங்கியுள்ளது. (சூஹனி, 2009). பராமரிப்பு என்பது ஒரு கணவனிடமிருந்து தன் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம், போக்குவரத்து, நீர், மின்சாரம் ஆகிய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய அடிப்படையான செலவினைக் குறிக்கின்றது.(சபானா,2015). இத்தகைய பராமரிப்பு தொடர்பில் இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 47(1)(ஆ,ஈ) என்பவற்றில் மனைவிக்கான பராமரிப்பு பற்றி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மனைவியினால் மண நீக்கத்தின் பதிவு வரை அல்லது இத்தாக் காலப் பகுதியின் போது அல்லது மண நீக்கத்தை பதிவு செய்யும் போது அப்பெண் கர்ப்பிணியாக இருப்பின் அவள் பிள்ளையை பெற்றுக் கொள்ளும் வரை பராமரிப்புக்காக மண நீக்கஞ் செய்யப்பட்ட மனைவியின் ஏதேனும் கோரிக்கை என குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 47(1)(எ)இல் ஒரு மனைவியின் அல்லது மணநீக்கஞ் செய்யப்பட்ட மனைவியின் பிரசவச் செலவுக்கான ஏதேனும் கோரிக்கை பற்றியும்பிள்ளைகளுக்கான பராமரிப்பு தொடர்பில் பிரிவு 47(1)(இ) ஆனது நெறிமுறைப் பிள்ளை மற்றும் நெறிமுறையற்ற பிள்ளையின் பராமரிப்பிற்கான கோரிக்கை பற்றியும் ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது.

மேலும், மண நீக்கஞ் செய்யப்பட்ட மனைவியை பராமரிப்பது தொடர்பில் அல் குர்ஆன் தலாக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்புப் பெறத் தகுதியுண்டு. அவ்வாறு பராமரிப்பது இறையச்சமுடையவர்கள் மீது கடமையாகும் என்கிறது. **"தவிர தலாக்குக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்புப் பெறத் தகுதியுண்டு."** (அல்பகறா: 241) இப்பராமரிப்பு தொடர்பான வசனத்தை இஸ்லாமிய நாடுகள் இரண்டு விதமாக பொருள்கோடல் செய்துள்ளன. ஒன்று இத்தா காலம் முடியும் வரையான பராமரிப்பு, மற்றொன்று விவாகரத்தின் போது மொத்தமாக வழங்கப்படும் ஜீவனாம்சத் தொகையான மதா∴. (متاع)எனும் பராமரிப்பாகும். (ஹஸனா, 2015).

முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தில் விவாகரத்தின் போது அதற்கான இத்தா காலம் முடியும் வரையான பராமரிப்பு தொடர்பான ஏற்பாடுகள் மாத்திரமே காணப்படுகின்றன. பிரிவு 47(1) இது தொடர்பான ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது. எனினும், பராமரிப்பின் மற்றுமொரு வகையிலான மதா∴. தொடர்பில் எவ்விதச் சட்டங்களும் இச்சட்டக் கோவையில் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகைய மனைவி மற்றும் பிள்ளை தன் கணவன் அல்லது தந்தையினால் முறையாகப் பராமரிக்கப்படாதவிடத்து அதற்கான நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ளுமுகமாக குறித்த மனைவியானவள் தன் பிரதேச காழி நீதிமன்றத்தில் கோரிக்கை செய்ய வேண்டும். இத்தகைய கோரிக்கையை ஏற்று அதனைப் பெற்றுக்கொடுக்கும் நியாயாதிக்கத்தினை சட்டம் காழி நீதிமன்றத்திற்கே வழங்கியுள்ளது.

இன்று இலங்கையில் முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து, மனைவி மற்றும் பிள்ளைப் பராமரிப்பு தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான இஸ்லாமிய அமைப்பாக காழி நீதிமன்றங்கள் திகழ்கின்றன. தற்பொழுது இலங்கையில் 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் 44ஆம் நீதி அதிகாரப் பிரிவில் 65 காழிகள் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். (பௌசுல்,2015).

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகள் நிலையானதாக காணப்பட்ட போதிலும் இன்று காழி நீதிபதிகளின் தகைமை மற்றும் அவர்களது செயற்பாடுகள் காரணமாக காழி நீதிமன்றங்களுக்கிடையில் பராமரிப்பு தொடர்பிலான நடைமுறைகள் வேறுபடுகின்றன. (சலீம், 2001).

ஒரு சில காழி நீதிமன்றங்களில் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இலங்கையின் பெரும்பான்மையான காழி நீதிமன்றங்களில் பராமரிப்புத் தொடர்பான ஒரு சில சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. இத்தகைய நடைமுறை முறைகோட்டினால் பராமரிப்புக்கான கோரிக்கையை மேற்கொள்ளும் முஸ்லிம் பெண்கள் மற்றும் பிள்ளைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (சலீம், 2001).

இவ்வாய்வுப் பிரதேசமான இலங்கை வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கற்பிட்டியானதுமுஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள பிரதேசமாகும். (கற்பிட்டிப் பிரதேச செயலக அறிக்கை, 2012)இங்கு 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காழி நீதிமன்றமானது கற்பிட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உள்ளூர் முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து மற்றும் பராமரிப்பு தொடர்பான சட்ட நடைமுறைகளை மேற்கொள்கின்றது.

இக்காழி நீதிமன்றத்தில் கடந்த மூன்று வருடங்களில் (2013 - 2015) பராமரிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 90 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் 50 வழக்குகள் பிள்ளைப் பராமரிப்பு தொடர்பிலும் 33 வழக்குகள் மனைவிக்கான பராமரிப்பு தொடர்பானதாகவும் 6 வழக்குகள் இத்தாப் பராமரிப்பு தொடர்பானதாகவும் காணப்படுகின்றன. (காழி நீதிமன்ற குறிப்பேடு). இதனடிப்படையில், கற்பிட்டி காழி நீதிமன்றத்தின் பராமரிப்புச் சட்ட நடைமுறையை இவ்வாய்வு பரிசீலனைக்குட்படுத்துகின்றது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் பராமரிப்புச் சட்ட நடைமுறைகள் ஒரு சில காழி நீதிமன்றங்களினால் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுதல்.

## 4. ஆய்வின் நோக்கம்

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் பராமரிப்பு குறித்த கற்பிட்டி காழி நீதிமன்ற நடைமுறைகளைப் பரிசீலித்தல் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## 5. ஆய்வு முறையியல்

பண்புரீதியான ஆய்வு முறையியலைக் கொண்ட இவ்வாய்வு முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். கற்பிட்டி காழி நீதிமன்றத்தினால் 2013 - 2015 வரையில் பராமரிப்பு தொடர்பில் தீர்க்கப்பட்ட 90 வழக்குகளில் 50 வழக்குகள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கற்பிட்டி காழி நீதிபதியிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இக்காழி நீதிமன்றத்தின் பராமரிப்பு தொடர்பான ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 6. கலந்துரையாடலும் பிரதான கண்டுபிடிப்புக்களும்

இப்பகுதி கற்பிட்டிப் பிரதேசம் பற்றிய ஓர் அறிமுகத்தையும், பராமரிப்பு தொடர்பான நடைமுறைகளையும், இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

### 6.1 கற்பிட்டிப் பிரதேசம் பற்றிய அறிமுகம்

இலங்கையில் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கற்பிட்டிப் பிரதேசத்தில் கற்பிட்டி முதல் கரம்பை வரையிலான பிரதேச செயலகத்திற்குட்பட்ட 26 கிராம சேவகப் பிரிவுகள் காணப்படுகின்றன. இப்பிரதேசமானது பல்லின கலாசாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கற்பிட்டியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் தமிழர்கள், சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இங்கு அண்ணளவாக 47,178 முஸ்லிம்களும், 3,955 இந்துக்களும், 5,547 பௌத்தர்களும், 27,880 கிறிஸ்தவர்களும் வசிக்கின்றனர். இங்கு பெரும்பான்மையான இனமாக காணப்படும் முஸ்லிம்களுள் 22,981 ஆண்களும், 24,197 பெண்களும் காணப்படுகின்றனர். (கற்பிட்டிப் பிரதேச செயலக அறிக்கை 2012).

### 6.2 கற்பிட்டி காழி நீதிமன்றம்

புத்தளம் மாவட்ட முஸ்லிம்களது விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் நீதிமன்றமாக புத்தளம், சிலாபம் வலய காழி நீதிமன்றமே வெகுகாலமாக செயற்பட்டு வந்துள்ளது. பின்னர் கற்பிட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முஸ்லிம்களுக்கான தனியான காழி நீதிமன்றத்தின் தேவை உணரப்பட்டு 2000ஆம் ஆண்டளவில் கற்பிட்டிப் பிரிவு காழி நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. இந்நீதிமன்றமானது கற்பிட்டி முதல் கரம்பை வரையிலான 26 கிராம சேவகப் பிரிவுகளுக்குட்பட்ட உள்ளூர் முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து மற்றும் பராமரிப்பு விடயங்களில் நியாயாதிக்கத்தைக் கொண்டதாக திகழ்கின்றது.

ஆய்வுப் பிரதேசமான கற்பிட்டி காழி நீதிமன்றத்தில் 2013 - 2015 வரையில் பராமரிப்பு தொடர்பில் 90 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன.இவ்வழக்குகளிலிருந்து எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 50 வழக்குகளில் 25 பிள்ளைப் பராமரிப்பு வழக்குகளும் (50%) 22 மனைவிப் பராமரிப்பு வழக்குகளும் (44%) 3 இத்தாப் பராமரிப்பு வழக்குகளும் (6%) ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

### 6.3 பராமரிப்பு விசாரணைகளுக்கான காழி நீதிமன்ற நடைமுறைகள்

1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 47 (1)இன் பிரகாரம் கணவனால் முறையாகப் பராமரிக்கப்படாத மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான பராமரிப்புக் கோரிக்கையானது குறித்த மனைவி மற்றும் பிள்ளைகள் அல்லது அவர்களது சார்பில் எவரேனும் தாம் வசிக்கின்ற பிரதேசத்தில் நியாயாதிக்கமுடைய காழி நீதிமன்றத்திலே விண்ணப்பிக்க வேண்டும். இதனடிப்படையில் இச்சட்டத்தின் 4ஆம் அட்டவணையின் விதிகளுக்கமைய காழியானவர் பராமரிப்பு தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் கற்பிட்டி காழி நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு சட்ட நடைமுறைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

#### 6.3.1 பராமரிப்புக் கோரி வழக்கினை தாக்கல் செய்தல்

ஒரு மனைவி தன் கணவனால் முறையாகப் பராமரிக்கப்படாத விடத்து அதனைக் கோரி காழி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாய்வுப் பிரதேசத்தில் கணவனின் மறுமணம், மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டுச் செல்லல், நீண்ட காலமாக தன் குடும்பத்துடன் எவ்வித தொடர்புமின்றி வெளிநாட்டில் இருத்தல், நிரந்தரமான தொழிலின்மை,கணவன் நீண்ட நாட்கள் சிறையிலிருத்தல் போன்ற காரணிகளினடிப்படையில் கணவனால் முறையாகப் பராமரிக்கப்படாத மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான பராமரிப்பினை கோரியே அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

இவ்வாறு முறையாக பராமரிக்கப்படாத மனைவி மற்றும் பிள்ளைகள் குறித்த கணவன் அல்லது தந்தையிடமிருந்து அதனைக் கோரிப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் காழி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது குறித்த சில ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வகையில், பராமரிப்பிற்கான கோரிக்கை கடிதம், திருமணப் பதிவுச் சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், தான் வசிக்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் அத்தாட்சிக் கடிதம், தேசிய அடையாள அட்டையின் பிரதி ஆகிய அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன. (நேர்காணல், காழி நீதிபதி).

மேலே சொல்லப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மனைவிக்கான பராமரிப்பானது (WM) எனவும் பிள்ளைக்கான தாபரிப்பானது (CM) எனவும் வகைப்படுத்தப்பட்டு, இரு விண்ணப்ப

படிவங்களில் காழி நீதிபதியின் உதவியாளரால் பதிவு செய்யப்படும். மேலும், குழந்தைப் பிறப்புக்கான கோரிக்கையானது (LE) எனவும், தலாக் மற்றும் பஸ்ஹ் விவாகரத்துப் பெற்ற மனைவியின் இத்தாப் பராமரிப்பிற்கான கோரிக்கையானது (IM) எனவும் குறிப்பிடப்பட்டு படிவங்களில் பதிவு செய்யப்படுகின்றது. இத்தகைய பராமரிப்பிற்கான விண்ணப்பமானது காழி நீதிபதியால் குறித்த ஒரு திகதியில் விண்ணப்பதாரிக்கு வாசித்து விளங்கப்படுத்தப்பட்டு, அவரது முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்படப்படுகின்றது. (நேர்காணல், காழி நீதிபதி).

இவ்வாய்வுப் பிரதேசத்தில் பராமரிப்பு கோரிக்கைக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முறையாகப் பேணப்படுகின்றமை அறியப்பட்டுள்ளது.

### 6.3.2 பிரதிவாதிக்கு அறிவித்தலை வழங்குதல்

பராமரிப்பு தொடர்பான விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் காழி நீதிபதியினால் அவ்வழக்கினை விசாரணை செய்வதற்காக ஒரு திகதி நியமிக்கப்படுகின்றது. இக்காழி நீதிமன்றத்தில் பராமரிப்பு தொடர்பான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு மாத காலத்தின் பின்னரே விசாரணைக்கான திகதி தீர்மானிக்கப்படுகிறது. (வழக்காய்வு, மனைவி மற்றும் பிள்ளைப் பராமரிப்பு).

அவ்வகையில் வழக்கினை விசாரணை செய்வதற்காக காழி நீதிபதியால் குறிப்பிடப்பட்ட திகதியில் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்குமாறு காழியானவர் பிரதிவாதிக்கு அறிவிப்பு செய்தல் வேண்டும். இக்காழி நீதிமன்றத்தினால் பிரதிவாதிக்கு பதிவுத் தபால் மூலம் அத்தகைய கட்டளை அனுப்பிவைக்கப்படுகின்றது. (நேர்காணல், காழி நீதிபதி).

இத்தகைய பிரதிவாதிக்கான கட்டளை பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் உரிய திகதியில் பிரதிவாதி சமூகமளித்தால் அவ்வழக்கு காழியினால் விசாரணை செய்யப்படுகின்றது. அவ்வாறின்றி, குறித்த தவணையிடப்பட்ட தினத்தில் பிரதிவாதி சமூகமளிக்கவில்லையெனில் அவர் வசிக்கும் கிராம சேவக உத்தியோகத்தருக்கு அக்கட்டளை அனுப்பிவைக்கப்பட்டு குறித்த நபரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றது. அவ்வாறு உரிய நபரிடம் அவ்வறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கிராம சேவக உத்தியோகத்தரால் காழி நீதிபதிக்கு அவ்வறிக்கை எத்திவைக்கப்படுகின்றது.

இத்தகைய செயற்பாட்டின் பின்னர் வழங்கப்பட்ட திகதியில் குறித்த பிரதிவாதி சமூகமளிக்கவில்லையெனில் மீண்டும் அடுத்த தவணையிடப்பட்டு பிரதிவாதி வசிக்கும் பிரதேசத்தின் பொலீஸ் நிலையத்திற்கு அவ்வறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டு பிரதிவாதியிடம் சேர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பின்னர் பொலீஸ் உத்தியோகத்தரால் காழி நீதிபதிக்கு அவ்வறிக்கை எத்திவைக்கப்படுகின்றது.

இவ்வாறாக, பிரதிவாதி குறித்த தவணையில் சமூகமளிக்காவிடின் அவ்வழக்கினை விசாரணை செய்வதற்காக மூன்று மாத காலமாக பிரதிவாதிக்கு அறிவித்தல் செய்யப்படுகின்றது. பிரதிவாதி வெளிநாட்டில் வசிக்கின்றார் அல்லது குறித்த இடத்தில் அவர் இல்லை என்பதற்கான தகவல்கள் காழி நீதிபதிக்கு கிடைக்கப்பெற்றால் அதனை காழி உறுதிப்படுத்திக் கொண்டு பிரதிவாதியின் உறவினரிடம் அவ்வறிவித்தலை சேர்ப்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. (நேர்காணல், காழி நீதிபதி). ஆனால் இவ்வாய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் நான்காம் அட்டவணையின் பிரகாரம் பிரதிவாதி வசிக்கும் ஜும்மாப் பள்ளிவாசலிலோ, பிரதிவாதியின் நெருங்கிய உறவினரின் வீட்டிலோ அவ்வறிவித்தல் ஒட்டப்படும் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இவ்வாய்வுப் பிரதேசத்தில் குறித்த விசாரணைக்கான திகதியில் பிரதிவாதி சமூகமளிக்காத நிலையே பெரும்பாலான வழக்காய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய பிரதிவாதியின் சமூகமின்மையால் வழக்கு நடவடிக்கையானது மிகவும் தாமதப்படுத்தப்படுகின்றது. மேலும், உரிய திகதியில்எதிர்ப்பார்ப்புடன் வருகின்ற கோரிக்கையாளர்கள் திரும்பிச் செல்கின்ற நிலையும் அறியப்பட்டுள்ளது.

### 6.3.3 பராமரிப்பிற்கான வழக்கினை விசாரணை செய்தல்

காழி நீதிபதியினால் விசாரணைக்காக தவணையிடப்பட்ட திகதியில் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட கட்டளைக்கிணங்க பிரதிவாதியும், குறித்த வழக்கினை தாக்கல் செய்த வாதியும் சமூகமளிக்குமிடத்து அப்பராமரிப்பு வழக்கானது விசாரணை செய்யப்படுகின்றது. இக்காழி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பராமரிப்பு வழக்குகள் விசாரணை செய்யப்பட ஆரம்பிக்கும் போது திறத்தவர்களிடம் சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளப்படுகின்றது.

விசாரணையானது முதலில் பிரதிவாதியிடமே ஆரம்பிக்கப்படுகின்றது. ஏற்கனவே, விண்ணப்பதாரியான மனைவியின் கோரிக்கையை நன்கு விளங்கிய பின்னர் காழி நீதிபதியால் பிரதிவாதியிடம் தாம் தன் மனைவி, பிள்ளைகளுக்குரிய தாபரிப்பினை முறையாக செலுத்தாமைக்கான காரணி தொடர்பில் குறித்த பிரதிவாதியான கணவனிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கு குறித்த பராமரிப்பு தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது தன் மனைவி, பிள்ளைகளை பராமரிக்காததற்கான காரணங்களை பிரதிவாதி காழி நீதிபதியிடம் முறையாக குறிப்பிடாத நிலையே பெரும்பாலும் காணப்படுகின்றது. மேலும், குறித்த கணவனான பிரதிவாதி, தனக்கு நிரந்தரமான தொழில்லை என்ற காரணத்தையே அதிகம் முன்வைக்கும் நிலையை காணக் கூடியதாகவுள்ளது. (நேர்காணல்: காழி நீதிபதி).

### 6.3.4 பராமரிப்பு வழக்கிற்கான தீர்ப்பினை வழங்குதல்

காழி நீதவான் இரு திறத்தவர்களினதும் வாக்குமூலங்களை நன்கு விளங்கிய பின்னர் ஒரு கட்டளையை பிறப்பித்தல் வேண்டும். பராமரிப்பு தொடர்பான விசாரணையின் போது காழியானவர் கணவனின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே பராமரிப்பிற்கான தொகையை தீர்மானிக்கவேண்டும்.மனைவியின் பராமரிப்பிற்கான தொகை கணவனின் நிதிநிலமைகளிலேயே தங்கியுள்ளது. “கமர் எதிர் சித்தி ஸெயின், 1955” என்ற வழக்கில் காழிகள் சபையானது யார் தாபரிப்பு செலுத்த வேண்டிய கடப்பாட்டுடன் இருக்கின்றாரோ அவரது உண்மையான இயலுமான வருமானத்தைக் கொண்டே பராமரிப்பு விடயம் தீர்மானிக்கப்பட வேண்டும் என எடுத்துக் கூறியது. அதாவது, கணவன் தொழிலற்றவராக இருந்த போதும் செலுத்தப்பட வேண்டிய தொகை பற்றித் தீர்மானிக்கப்படும் போது அவரது உழைப்பதற்கான ஆற்றல் கருத்திற் கொள்ளப்படும்.(சூளனி கொடிகார, 2015).

இக்காழி நீதிமன்றத்தில் கணவனின் வருமானத்தை உறுதிப்படுத்தும் எத்தகைய சான்றிதழ்களும் கோரப்படுவதில்லை. மேலும், கணவனால் கூறப்படும் வாய்மொழி சாட்சியத்தைக் அடிப்படையாகக் கொண்டே பராமரிப்பிற்கான தொகையும் தீர்மானிக்கப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கையானது காழியினால் குறைவான பராமரிப்பு தொகையினை தீர்மானிக்க வழிவகுக்கின்றது. (வழக்காய்வு,மனைவி, பிள்ளைப் பராமரிப்பு).

1951ஆம் ஆண்டின் முஸ்லிம் திருமணம், மண நீக்கச் சட்டத்தின் பிரிவு 36இன் பிரகாரம் பராமரிப்புத் தொகையானது குறித்த கோரிக்கையாளரினால் பராமரிப்பு விண்ணப்பிக்கப்பட்ட திகதியிலிருந்தே செலுத்தப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்படல் வேண்டும். இக்காழி நீதிமன்றத்தில் குறித்த வழக்கானது விசாரணைக்காக அழைக்கப்பட்ட திகதியிலிருந்தே பராமரிப்புக்கான தொகை தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், பராமரிப்புக் கோரி தாக்கல் செய்த திறத்தவர்களுள் சிலர் விசாரணையின் போது காழியினால் சமரசம் செய்யப்பட்டுஒற்றுமையாக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (வழக்காய்வு, மனைவிப் பராமரிப்பு).

பொதுவாக, பராமரிப்புக் கோரி இங்கு தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் பெரும்பான்மையானவை இறுதியில் பஸ்ஹ் விவாகரத்தில் முடிவடைந்து மனைவிக்கான பராமரிப்பு வழக்கு அத்துடன் ரத்து செய்யப்படுகின்றது. இங்கு குறித்த வழக்கானது தீர்க்கப்பட்ட பின்னர் முறையாக பராமரிப்புத் தொகையானது செலுத்தப்படாமல் நீண்ட காலமாக நிலுவையில் காணப்படுவதனாலும் இதற்கான தீர்வு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதத்தினாலுமே பெண்கள் பஸ்ஹ் விவாகரத்தைக் கோருகின்ற நிலை ஏற்படுகின்றது. இதன் பின்னர் மனைவிக்கான பராமரிப்பு வழக்கானது முடிவுறுத்தப்பட்டு இத்தாக் காலத்திற்கான பராமரிப்புத் தொகை தீர்க்கப்பட்டு பஸ்ஹ் விவாகரத்து மேற்கொள்ளப்படுகின்ற நிலையை காணக்கூடியதாகவுள்ளது. (வழக்காய்வு, மனைவிப் பராமரிப்பு).

மேலும், இக்காழி நீதிமன்றத்தினால் இத்தாப் பராமரிப்பிற்காக அனைத்து வழக்குகளிலும் மாதாந்தம் 5000 ரூபா அளவில் மூன்று மாத காலத்திற்குமாக 15000 ரூபா பணத்தொகையே தீர்க்கப்படுகின்றது. இங்கு இத்தாப் பராமரிப்பினை வழங்க வேண்டிய திறத்தவரின் வருமான மட்ட அடிப்படையில் பராமரிப்பிற்கான தொகை தீர்மானிக்கப்படாமல் பொதுவாக தலாக் மற்றும் பஸ்ஹ் விவாகரத்தின் பின்னரான பராமரிப்பு தொகையானது சகலருக்கும் ஒரே அளவானதாகவே தீர்க்கப்படுகின்றது. (வழக்காய்வு, இத்தாப் பராமரிப்பு).

விசாரணைக்கு நியமிக்கப்பட்ட திகதியில் பிரதிவாதியான கணவன் காழி நீதிமன்றத்தில் பிரசன்னமாகத் தவறும் பட்சத்தில் அவருக்கு ஏற்கனவே காழியால் அனுப்பப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்றமைக்கான அறிக்கையை காழி பெற்றுக் கொண்டதனடிப்படையில் குறித்த வழக்கினை தாக்கல் செய்த மனைவி பராமரிப்பு தொடர்பான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள தகுதியானவர் என காழி திருப்தியடைந்து பராமரிப்புக்கான தொகையை தீர்மானித்து கட்டளையிடுகின்றார்.

இச்சட்டத்தின் 4ஆம் அட்டவணையின் பிரகாரம் இக்கட்டளைக்கெதிராக பிரதிவாதி நியாயமெடுத்துக்காட்டுதல் அவசியமாகும். எனினும், அத்தகைய நியாயமெடுத்துக்காட்டும் நடவடிக்கையினை பிரதிவாதி மேற்கொள்ளாத போது காழியினால் அக்கட்டளை இறுதியாக்கப்பட்டு பிரதிவாதிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் அதனை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் பிரதிவாதி முறையாக தீர்க்கப்பட்ட பராமரிப்புத் தொகையை காழி நீதிமன்றத்தில் செலுத்துவார். ஆனால், குறித்த பிரதிவாதி தகுந்த காரணத்தினடிப்படையில் கட்டளையாக்கப்படும் போது நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை என காழி முன்னிலையில் காரணங்காட்டுவாராயின் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பு செல்லுபடியற்றதாக்கப்படுகிறது. அவ்விசாரணையானது மீண்டும் பிரதிவாதி அறிவித்தலுக்கு சமூகமளித்தால் எவ்வாறு மேற்கொள்ளப்படுமோ அதே வகையில் காழியால் தொடரப்படுகின்றது.

இவ்வாய்வுப் பிரதேசத்தில் குறித்த பிரதிவாதி தனக்கு சுகமில்லை என்ற காரணத்தையே அதிகமாகக் கூறி தான் காழியினால் தீர்க்கப்பட்ட பராமரிப்புக் கட்டளைக்கு காரணங்காட்டத் தவறிவிட்டதாகத் தெரிவிப்பதுடன் குறித்த வழக்கினை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்துமாறு கேட்கின்ற நிலை காணப்படுகின்றது.

இக்காழி நீதிமன்றத்தில் முதற் தவணையில் பிரதிவாதி விசாரணைக்காக சமூகமளிக்காதவிடத்து மூன்று தவணைகளிடப்பட்டு பிரதிவாதியின் சமூகம் பார்க்கப்படுகின்றது. பொதுவாக, இரண்டாம் தவணையில் பிரதிவாதி விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு சமூகம் தருகின்றார். பிரதிவாதியினால் விசாரணைக்கு சமூகமளிக்க முடியாத பட்சத்தில் அவரின் நெருங்கிய உறவினரான தந்தை, தாய் மற்றும் சகோதரர்கள் சமூகமளிக்கின்றனர். (நேர்காணல்,காழி நீதிபதி).

### 6.3.5 பிரதிவாதிக்கு காரணமெடுத்துக்காட்டும் அறிவித்தலை அனுப்புதல்

காழியினால் குறித்த பிரதிவாதிக்கு தீர்க்கப்பட்ட பராமரிப்பு தொகையானது மாதாந்தம் முறையாகக் காழி நீதிமன்றத்தில் செலுத்தப்படல் வேண்டும். மூன்று மாதங்கள் தொடராக அக்கொடுப்பனவு காழி நீதிமன்றத்தில் செலுத்தப்படாமல் நிலுவையில் இருக்குமேயானால் குறித்த பிரதிவாதிக்கு 14 நாட்களுக்குள் நிலுவையிலுள்ள பணத்தொகை முழுவதும் செலுத்தப்படவேண்டும் எனவும் அவ்வாறே 14 நாட்களுக்குள் அவ்விடயம் தொடர்பாக பிரதிவாதி எத்தகு காரணமும் காட்டத்தவறும் பட்சத்தில் 14 நாட்களின் பின்னர் குறித்த விடயம் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்திற்கு எத்திவைக்கப்படும் என்பதாகவும் அறிவித்து காழி நீதிபதியால் காரணம் காட்டும் (Show-cause Notice) அறிவித்தல் பிரதிவாதிக்கு அனுப்பப்படுகின்றது. (நேர்காணல், காழி நீதிபதி).

இக்காழி நீதிமன்றத்தில் பராமரிப்பு பணத்தொகையானது பிரதிவாதியால் முறையாக செலுத்தப்படாமல் கூடியளவு பணத் தொகை நிலுவையில் உள்ள நிலையே காணப்படுகின்றது. உதாரணமாக மனைவி மற்றும் பிள்ளை தொடர்பில் மாதாந்தம் மூன்று பிள்ளைகளுக்கும் 6,000 ரூபாவும், மனைவிக்கு 4,000 ரூபாவுமாக மொத்தமாக ஒரு மாதத்திற்கு 10,000 ரூபா பராமரிப்புத் தொகையாக தீர்க்கப்பட்டுள்ள ஒரு வழக்கில் 8மாதங்கள் முறையாக தாபரிப்பு செலுத்தப்படாமல் 80,000 ரூபா நிலுவையில் காணப்படுகின்ற நிலையில் எட்டு மாதங்களின் பின்னரே அதற்கான காரணங்காட்டும் அறிவித்தல் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. (வழக்காய்வு, மனைவி மற்றும் பிள்ளைப் பராமரிப்பு).

மேலும், இவ்வாறு இக்காழி நீதிமன்றத்தில் காழி நீதிபதியினால் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட அறிவித்தலின் பின்னர் பிரதிவாதி தான் கடந்த காலத்தில் செலுத்தாமல் நிலுவையில் விட்டிருந்த பராமரிப்புத் தொகை முழுவதையும் செலுத்துவதில்லை. அதில் குறிப்பிட்ட ஒரு சிறு தொகையை செலுத்திவிட்டு மீண்டும் எஞ்சிய தொகைக்காக காழியிடம் 3 தவணைக் கால இடைவெளியைக் கோருகின்றனர். அவ்வாறே, காழியினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தவணையிடப்படுகின்றது. (வழக்காய்வு மனைவி, பிள்ளைப் பராமரிப்பு).

### 6.3.6 பராமரிப்பு தொடர்பான வலியுறுத்தற் கட்டளையை அனுப்புதல்

பராமரிப்பு தொகையானது முறையாக செலுத்தப்படாது அலட்சியமாக காணப்படும் பிரதிவாதிக்கு காரணம் காட்டும் அறிவித்தல் அனுப்பப்பட்டு 14 நாட்களின் பின் அவர் எத்தகைய பதிலையும் காழி நீதிமன்றத்திற்கு வழங்காத விடத்து காழி நீதிபதியினால் பிரதிவாதி வசிக்கும் பிரதேச நீதவான் நீதிமன்றத்திற்கு பராமரிப்பு தொடர்பான வலியுறுத்தற் கட்டளை (Enforcement Order)

அனுப்பப்படுகின்றது. இக்காழி நீதிமன்றத்தில் காரணம் காட்டும் அறிவித்தலானது பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டு 14 நாட்களுக்கு மேலாக சில தினங்கள் பிரதிவாதியின் பதில் எதிர்ப்பார்க்கப்பட்டு அதன் பின்னரே வலியுறுத்தற் கட்டளையானது (EO) காழியினால் புத்தளம் நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்றது.

இவ்வலியுறுத்தற் கட்டளையானது வழக்கு எண், வாதி, பிரதிவாதி தொடர்பான அம்சங்கள், குறித்த பிரதிவாதியினால் செலுத்தப்படாமல் விடுபட்ட பராமரிப்பின் மொத்த தொகை ஆகிய தகவல்கள் குறிப்பிடப்பட்டு குறித்த தொகையானது காழி நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென காழி நீதிபதியால் கோரிக்கை செய்யப்படும் விண்ணப்பமாகக் காணப்படுகின்றது.

இக்காழி நீதிமன்றத்தில் பிரதிவாதியினால் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட பராமரிப்புத் தொகை செலுத்தப்படாமல் தொடராக நிலுவையில் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே நீதவான் நீதிமன்றத்திற்கு வலியுறுத்தற் கட்டளை அனுப்பப்படுகின்றது. அதைவிட குறைந்த தொகைகளுக்காக இவ்வகையான வலியுறுத்தற் கட்டளைகள் அனுப்பப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (நேர்காணல், காழி நீதிபதி).

### 6.3.7 பராமரிப்பு பணத்தொகைக்கான பற்றுச் சீட்டினை வழங்கல்

இக்காழி நீதிமன்றத்தில் மாதாந்தம் பிரதிவாதியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பராமரிப்பு தொகையானது குறித்த கோரிக்கையாளருக்கு வழங்கப்படும் போது அதனை உறுதிப்படுத்தும் முகமாக காழி நீதிபதியினால் 1 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பற்றுச் சீட்டானது வழங்கப்படுகின்றது. இதில் குறித்த பணத்தொகையை தான் காழியிடமிருந்து பெற்றுக்கொண்டதாக பணம் பெறுபவரால் கையொப்பம் இடப்படுகின்றது. மேலும், ஏற்கனவே பராமரிப்பு தொகையில் செலுத்தப்படாமல் காணப்படும் நிலுவையிலுள்ள தொகையே பிரதிவாதியால் செலுத்தப்படும் பணத்தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (நேர்காணல், காழி நீதிமன்றம்).

### 6.3.8 காழி நீதிபதியினால் வழங்கப்படும் கட்டளையை எழுதிவைத்தல்

இக்காழி நீதிமன்றத்தில் பராமரிப்பு தொடர்பான வழக்கானது விசாரணை செய்யப்படும் போது ஒவ்வொரு தவணையிலும் நடைபெறக்கூடிய விடயங்கள் காழி நீதிமன்றத்தில் காணப்படும் ஜூரிகளால் எழுதப்படுகின்றது. அதாவது, குறித்த வழக்கு கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட திகதி, விசாரணைக்காக அழைக்கப்பட்ட திகதி, வாதி மற்றும் பிரதிவாதி குறித்த தினத்தில் சமூகமளித்தனரா? இல்லையா?, காழியால் தவணையிடப்பட்ட திகதி, காழியால் சமரச முயற்சி செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான விடயங்கள், காழியினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, பராமரிப்புக்காக தீர்க்கப்பட்ட தொகை, அதனை செலுத்துமாறு தீர்க்கப்பட்ட திகதி போன்ற காழியினால் வழக்கு ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் எழுதப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு தவணையிலும் வாதி மற்றும் பிரதிவாதியிடமிருந்து கையொப்பம் பெறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு எழுதப்பட்டுள்ள விடயங்கள் தெளிவற்றதாகவும் ஒழுங்குபடுத்தப்படாமலும் காணப்பட்டமை ஆய்வாளனுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாகவே இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பராமரிப்பு தொடர்பான விசாரணைக்கான விதிகள் நிலையான சட்டமாக காணப்பட்ட போதிலும் காழி நீதிபதிகளின் தகைமை மற்றும் காழி நீதிமன்றத்தின் செயற்பாடுகள் காரணமாக பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகளின் நடைமுறைகளாவன

காழி நீதிமன்றங்களுக்கிடையில் வித்தியாசப்படுகின்றன. இதனால் பராமரிப்பினைக் கோரி வழக்கினை தாக்கல் செய்யும் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

**7. முடிவுரை**

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் பராமரிப்பு குறித்த விசாரணைக்கான விதிகள் குறித்த முறையான தெளிவின்மை காரணமாக கற்பிட்டி காழி நீதிபதியினால் வழக்கு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுகின்றது. மேலும், சில பராமரிப்பு வழக்குகளில் பராமரிப்பிற்கான தொகையானது முறையாக தீர்க்கப்படாத நிலை காணப்படுகின்றது. வழக்குடன் தொடர்புபடும் நபர்கள் சட்டத்தினை மீறி நடக்கின்ற போது அதற்குரிய முறையான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுகின்றது. இத்தகைய வழக்கு நடைமுறை சீர்கேடுகள் காணப்படுவதனால் வழக்கினை தாக்கல் செய்யும் பெண்களும் பிள்ளைகளும் அதிகம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர். எனவே, காழி நீதிபதிகளால் வழக்கு நடைமுறைகள் சட்ட விதிகளுக்கமைய கால தாமதமின்றி முறையாக மேற்கொள்ளப்படுவதுடன் தம்மால் வழங்கப்பட்ட தீர்ப்பினை மீறி நடப்போருக்கு எதிரான நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.பராமரிப்பு தொடர்பான நடைமுறைகள் சட்டத்திற்கமைவாக முறையாக நடைமுறைப்படுத்தப்பட தகுதி வாய்ந்த நீதிபதிகள் நியமிக்கப்படுவதுடன் சட்டங்கள் காலத்திற்கு பொருத்தமாக முறையாக மீள்சீர்த்திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


கொடிகார சூளனி,(2009),இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம் கொள்கை, நடைமுறைமற்றும் பெண்கள் தொடர்பான அக்கறைக்குரிய விடயங்கள், கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

சலீம் மர்ஸுப்,(2001),இலங்கையில் காழி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும், கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

பௌசுல், எம்.பி., 2015, இலங்கை முஸ்லிம் சமூகத்தினரிடையே பெருகியுள்ள விவாகரத்தும், சமூகக் கட்டமைப்பில் அதன் தாக்கங்களும்,*உண்மை உதயம்.* பரகதெனிய: ஜம்இய்யதுல் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா.

ஹஸனா சே.இ.,(2015),இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டமும் இஸ்லாமியச் சட்டமும், கொழும்பு: இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.

Safana gul begum, (2015), Is equal justice possible a Review of Sri Lanka’s Muslim Marriage And Divorce Act & Its Implementation, Colombo: Islamic Women’s Association forResearch & Empowerment.

காழி நீதிமன்றம், (2013),வருடாந்த அறிக்கை - கற்பிட்டி

காழி நீதிமன்றம்,(2014),வருடாந்த அறிக்கை - கற்பிட்டி

காழி நீதிமன்றம்,(2015),வருடாந்த அறிக்கை - கற்பிட்டி

பிரதேச செயலகம், (2012),வருடாந்த அறிக்கை - கற்பிட்டி

நேர்காணல், எஸ்.ஏ.பி.ஏ கபீர், காழி நீதிபதி, கற்பிட்டி காழி நீதிமன்றம், புத்தளம்.